காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியா - சீனா எல்லை விவகாரம் இராணுவ மட்டத்திலான பேச்சுகள்



இந்தியா–சீனாஇடையே இன்று (திங்கட்கிழமை) இராணுவ அதிகாரிகள் மட்டத்திலான ஏழாவது சுற்று பேச்சு நடைபெற்றது.

கமாண்டர் ஜெனரல் ஹரிந்தர் சிங் தலைமையிலான இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் இன்றைய பேச்சில் பங்கேற்றனர். சீனா தரப்பில் அந்நாட்டு அரசு அதிகாரி ஒருவரும் பேச்சில் கலந்துகொண்டார்.

லடாக் மலைச்சிகரங்களில் குவிக்கப்பட்டுள்ள படைகளை சீனா திரும்பப் பெற வேண்டும் என இக்கூட்டத்தில் இந்தியா வலியுறுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

லடாக்கில்அசல்எல்லைக் கோடு பகுதியின் சில பகுதிகளுக்கு சீனா உரிமை கோரி வருகிறது. பாங் – காங் – சோ மலைப்பகுதிகளில் சீனப் படைகள் குவிக்கப்பட்டுள்ளமையையடுத்து எல்லையில் கடந்த சில மாதங்களாக பதற்றமான சூழ்நிலை காணப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து இந்தியாவும் தனது போர் விமானங்களை லே விமானப்படைத் தளத்தில் நிறுத்திவைத்துள்ளது. கடந்த 35 நாள்களில் பத்து ஏவுகணை சோதனைகளையும் நடத்தி வருகிறமை குறிப்பிடத்தக்கது.

# வேளாண் சட்டமூலம் குறித்து பதிலளிக்குக மத்திய அரசுக்கு உச்சநீதிமன்று உத்தரவு



வேளாண் சட்டமூலங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் தொடர்பில் 4 வாரங்களில் விளக்கமளிக்குமாறு மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரில் மூன்று வேளாண் சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்தச் சட்டமூலங்களுக்கு எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் அந்த சட்டமூலத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதிகள் மத்திய அரசு இது தொடர்பில் பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளதுடன், வழக்கை நான்கு வாரங்களுக்கு ஒத்திவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காங்கிரஸிலிருந்து விலகிய குஷ்பு பா.ஜ.கவில் இணைவு

காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்ட நடிகை குஷ்பு பா.ஜ.கவில் இணைந்தார்.

காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் பொறுப்பில் இருந்து நடிகை குஷ்பு நீக்கப்பட்டுள்ளார் என காங்கிரஸ் கட்சியின் தலைவர் தொடர்பு பிரிவு பொறுப்பாளர் பிரணவ் ஜா இன்று காலை அறிவித்தார்.

தேசிய செய்தி தொடர்பாளர் பதவி பறிக்கப்பட்ட சில நிமிடங்களில் குஷ்பு காங்கிரஸில் இருந்து விலகினார் என அறிவித்தார்.

காலையில் காங்கிரஸில் இருந்து விலகிய குஷ்பு பிற்பகலில் பா.ஜ.கவில் இணைந்துகொண்டார்.

பா.ஜ.க. தேசியச் செயலாளர் சி.டி. ரவி முன்னிலையில் குஷ்பு கட்சியில் இணைந்துகொண்டார்.

இந்த நிலையில், நாடு முன்னேற்றப் பாதையில் பயணிக்க மோடி போன்ற தலைவர் தேவை என்பதை உணர்ந்து கொண்டேன் எனத் தெரிவித்துள்ள குஷ்பு, தமிழகத்தில் பா.ஜ.கவின் அடிமட்ட தொண்டராகச் செயற்படவுள்ளேன் என மேலும் தெரிவித்துள்ளார்.



# கொரோனாவின் வீரியம் குளிர்காலம் அதிகரிக்கும்!

## மத்திய சுகாதார அமைச்சர் ஹரவர்தன் எச்சரிக்கை



குளிர்காலத்தில் கொரோனா வைரஸின் வீரியம் அதிகரிக்கும் என்பதால் மக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என மத்திய சுகாதார அமைச்சர் ஹரவர்தன் வலியுறுத்தியுள்ளார்.

'சண்டே சம்வத்' தளத்தின் மூலம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர் –

பண்டிகைகளை அனைவரும் வீடுகளுக்குள்ளேயே தங்களுக்கு அன்பானவர்களுடன் சேர்ந்து கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பண்டிகையின் பெயரால் வெளியே கண்காட்சிகள், பந்தல்கள் என்று யாரும் செல்லக் கூடாது. இப்போது கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக போராடுவதுதான் அனைவரின் முதன்மையான தர்மமாக இருக்க வேண்டும்.

கொரோனா தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டுக்கு மத்திய அரசு அங்கீகாரம் அளிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. தற்போது கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் முதலாவது, இரண்டாவது மூன்றாவது கட்ட மருத்துவ பரிசோதனைகளில் உள்ளன. அவற்றின் முடிவுகளுக்காகக் காத்திருக்கிறோம்.

கொரோனா வைரஸ் ஒரு சுவாச வைரஸ். குளிர்கால நிலையில், இந்த வைரஸ்களின் பரவுதல் அதிகரிக்கும் எனத் தெரிகிறது. குளிர்கால நிலை குறைந்த ஈரப்பதம் உள்ள சூழலில் சுவாச வைரஸ்கள் நல்ல வளர்ச்சியைப் பெறுகின்றன. எனவே மனதில் அனைவரும் கொள்ள வேண்டிய ஓர் அம்சம் உண்டு.

அது குளிர்காலத்தில் குடியிருப்புகளில் அதிகமாக கூட்டம் கூடுகிறபோது பரவல் அதிகரிக்கலாம் என்பதுதான். எனவே இந்த சூழலில் குளிர்காலத்தில் தொற்று பரவல் அதிகரிக்கலாம் என்று கருதுவது தவறல்ல.

கொரோனா வைரஸ் தொற்றை கண்டறிவதற்காக பெலுடா பரிசோதனை முறை எப்போது வரும் என்ற கேள்வி இருக்கிறது. சி.எஸ்.ஐ.ஆரின் ஐ.ஜி.ஐ.பி. அமைப்பு உருவாக்கி உள்ள இந்த பரிசோதனையை வணிக அடிப்படையில் பயன்படுத்துவதற்கு இந்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு தனது அனுமதியை வழங்கி உள்ளது.
– எனத் தெரிவித்துள்ளார்.

# ஹத்ராஸில் பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினர் நீதிமன்றில் முன்னிலை!



உத்தரப்பிரதேச மாநிலம் ஹத்ராஸில் இளம் பெண்ணின் கொலை வழக்கு தொடர்பான விசாரணை இன்று (திங்கட்கிழமை) அலகாபாத் உயர்நீதிமன்ற கிளையில் நடைபெற்றது.

இதன்போது பாதிக்கப்பட்ட குறித்த பெண்ணின் பெற்றோர் வாக்குமூலம் வழங்கிள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக அவர்கள் இன்று அதிகாலை பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் தங்கள் சொந்த கிராமத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர். .

பொலிஸார் தங்கள் மகளின் உடலைக் கூட காட்டாமல் இறுதிச்சடங்கு செய்ததார்கள் எனவும் தங்களை மிரட்டி வருகின்றனர் எனவும் அந்த குடும்பத்தினர் முறைப்பாடு அளித்துள்ளமையை அடுத்து அவர்களை ஆஜர்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

# முதலமைச்சர் முன்னிலையில் 14 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

*தமிழகத்தில் பத்தாயிரம் கோடி ரூபா முதலீட்டில் ஏழாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில், 14 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.*

*துளூறு குழுமம், அப்போலோ டயர்ஸ், பிரிட்டானியா பிஸ்கட் நிறுவனம், ஐநாக்ஸ் நீர்ம ஆக்சிஜன் தயாரிப்பு நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்கள், தமிழகத்தில் அதன் தொழில் திட்டங்களில் பத்தாயிரம் கோடி ரூபா முதலீடு செய்யும். இதனால் புதிதாக ஏழாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.*



*ஒசூரில் ஐநாக்ஸ் நீர்ம ஆக்சிஜன் நிறுவனமும் சென்னையை அடுத்த ஒரகடத்தில் அப்போலோ டயர்ஸ் நிறுவனமும் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவுள்ளன.*

*திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் பிரிட்டானியா பிஸ்கட் நிறுவனம், தனது தொழிற்சாலையை நிறுவ உள்ளது.*

*மும்பையைத் தலைமையிடமாகக் கொண்ட துளூறு குழுமம் தமிழகத்தின் 5 மாவட்டங்களில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்னுற்பத்தித் திட்டங்களில் முதலீடு செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது*

# இமாச்சல முதலமைச்சர் தாகூருக்கு கொரோனா!



இமாச்சலபிரதேச மாநில முதலமைச்சர் ஜெய்ராம் தாகூருக்கு கொரோனா வைரஸ் தொற்று, இன்று (திங்கட்கிழமை) உறுதி செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் ஜெய்ராம்தாகூருக்குகொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டமையைத் தொடர்ந்து, அவர் தன்னை தனிமைப்படுத்திக்கொண்டுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளிட்டுள்ளன.

இது தொடர்பாக முதலமைச்சர் ஜெய்ராம் தாகூர் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளவை வருமாறு –

கடந்த சில நாள்களுக்கு முன்னர், கொரோனா பாதிக்கப்பட்ட நபருடன் தொடர்பில் இருந்தமையால் கடந்த ஒரு வாரமாக நான் எனது வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டிருந்தேன்.

ஆனால்,கடந்த 2 நாள்களாக எனக்கு கொரோனா அறிகுறிகள் ஏற்பட்டன. இதையடுத்து, இன்று நான் பரிசோதனை செய்துகொண்டேன்.

இந்தப் பரிசோதனையில் கொரோனா தொற்று இருக்கின்றமை உறுதியாகியுள்ளது. இதனால், மருத்துவர்களின் அறிவுறுத்தலின்படி நான் எனது வீட்டில் தனிமைப்படுத்திக்கொண்டுள்ளேன்.
– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

